# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, மாச்சு மாதம் 7 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை : ரூபா 10.00 தபாற் செலவு : ரூபா 5.00

# 2008 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ.ஒ. 17/2007

## (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 393 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் "ஒரு விசாரணை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு நுண்ணாய்வு அல்லது விசாரணை அல்லது தோதானவிடத்து இரண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (1) ஆம் உட்பிரிவில், (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவ்றறுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :—

(அ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், ஏதேனும் நியதிச்சட்டமுறையான குழுவின், ஏதேனும் பகிரங்க அல்லது உள்ளூரதிகார சபையின் அல்லது வேறேதேனும் நிறுவனத்தின் நிருவாகம், முகாமை மற்றும் பணிகள் பற்றி ; அல்லது

(ஆ) எவரேனும் பகிரங்க அலுவலரின், நியதிச் சட்ட முறையான குழுவொன்றின், ஏதேனும் பகிரங்க அல்லது உள்ளூரதிகாரசபையின் அல்லது ஏதேனும் நிறுவனத்தின் ஊழியரொருவரினது நடத்தை பற்றி ; அல்லது

(இ) எந்தக் கருமம் அல்லது சம்பவம் தொடர்பில் விடயத்துக்கேற்ப, ஒரு நுண்ணாய்வு அல்லது விசாரணை அல்லது ஒரு நுண்ணாய்வு மற்றும் விசாரணை ஆகிய இரண்டும், அவரது அபிப் பிராயத்தில், தேசிய நலனுக்கானதாகவிருக்குமோ அல்லது பொதுமக்கள் காப்புக்காக அல்லது நல்வாழ்வுக்காக இருக்குமோ, அந்த ஏதேனும் கருமம் அல்லது சம்பவம் பற்றி ," ;

(3) அதன் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய நிருவாகம், நடத்தை அல்லது கருமம் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய நிருவாகம், முகாமை, பணிகள், நடத்தை, கருமம் அல்லது சம்பவம் பற்றி விடயத்துக்கேற்ப, நுண்ணாய்வு செய்வதற்கு அல்லது விசாரணை செய்வ தற்கு அல்லது நுண்ணாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் மற்றும் அறிக்கையிடுவதற்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அத்த கைய உறுப்பினர் :-

(அ) உறுப்பினரொருவர் என்ற முறையில் அவரது பதவியைத் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென அல்லது பிறழ்பிர யோகம் செய்துள்ளாரென அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக் குழுவை நியமிக்கின்ற ஆணைப்பத்தி ரத்தின்மூலம் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களைத் துர்ப்பிரயோகம் செய் துள்ளாரென அல்லது பிறழ்பிரயோ கம் செய்துள்ளாரென ;

(ஆ) இலஞ்சத்தில் அல்லது ஊழலில் ஈடுபட்டுள்ளாரென ; அல்லது

(இ) உள அல்லது உடற்றகுதியீனத்தினால் பீடிக்கப்பட்டுள்ளாரென,

சனாதிபதி திருப்திப்பட்டால் மட்டுமே அகற்றப் படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி உறுப் பினரொருவர் அகற்றப்படுவதன்மேல், சனாதி பதியானவர் அத்தகைய நிகழ்வைப் பாராளுமன் றத்துக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும்; அத்தகைய உறுப்பினர் அகற்றுகைக்கான கார ணங்களை அவர் அதன்கண் கூறுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளவிடத்து, சமுகம ளித்துள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக் கையினரின் ஒரரைவாசிக்குக் குறையாதோர் (இது ஆணைக்குழுவின் தவிசாளரை உள்ளடக்குதல் வேண்டும்), ஆணைக்குழுவின் உறுப்பாண்மை யில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப் பினும், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(6) ஆணைக்குழுவின் அறிக்கைகள், மறுதலிக் கும் கருத்துக்கள் எவையேனுமிருப்பின் அவையுட் பட, ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களின தும் கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டு மென்பதுடன், அத்தகைய அறிக்கைகள், ஆணைக் குழுவின் உறுப்பினரொருவர் இறக்குமிடத்து, பதவிநீங்குமிடத்து, பொறுப்பு விடுவிக்கப்படுவ தற்கு விரும்புமிடத்து, ஆணைக்குழுவின் உறுப் பினரொருவராகச் செயலாற்றுவதற்கு அல்லது அத்தகைய அறிக்கையில் தமது கையொப்பத்தை இடுவதற்கு மறுக்குமிடத்து அல்லது இயலாதவ ராக வருமிடத்துத் தவிரவும் அவ்வாறன்றியும், எல்லா உறுப்பினர்களினாலும் கையொப்பமிடப் படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால், நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"ஆணைப் பத்திரத்தை மாற்றுதல் அல்லது ஒழித்தல்.

5. சனாதிபதியானவர், எந்நேரத்திலேனும், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஆணைப் பத்திரத்தை மாற்றலாம் அல்லது ஒழிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் :—

"(ஆஆ) ஏதேனும் வழக்கிலான வழக்குநடவடிக்கைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை, ஏதேனும் ஆவணத்தை அல்லது அத்தகைய ஆவணத்தின் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஏதேனும் நியாயசபையில் கோப்பிடப்பட்ட அல்லது பதியப்பட்ட வேறேதேனும் விடயத்தின் சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும்பிரதியைப் பெறுவதற்கு அத்தகைய சட்ட நீதிமன்றத்துக்கு அல்லது நியாயசபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கும் ;

(ஆஆஆ) எவரேனுமாளின் உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் உள்ள ஏதேனும் ஆவணத்தை, அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது வேறேதேனும் விடயத்தைக் காண்பிக்கும்படி அவரைத் தேவைப்படுத்துவதற்கும் ;

(ஆஆஆஆ) எவரேனுமாள் தனதுடைமையில் வைத்திருக்கக்கூடிய எழுத்திலான ஏதேனும் தகவலை ஆணைக் குழுவுக்கு வழங்கும்படி அவரைத் தேவைப்படுத் துவதற்கும் ;".

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு வொன்றுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் ஆணைப் பத்திரத்தின் நியதிகளின்படி ஏதேனும் அறிக்கை அளிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆணைக்குழு வானது, எந்த ஆளின் நடத்தை விசாரணையின் அல்லது நுண்ணாய்வின் விடயப்பொருளாக உள்ளதோ அல்லது அத்தகைய ஆணைக்குழு எந்தக் கருமத்தை நுண்ணாய்வு செய்வதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு ஆணையிடப் பட்டதோ அந்தக் கருமத்தில் எவ்வகையிலேனும் சம்பந்தப்பட்டுள்ள அல்லது அக்கறை கொண் டுள்ள அந்த எவரேனுமாள் தொடர்பில் எடுக்கப் படுவதற்கு அவசியமாகவுள்ளதென அது கருது கின்ற நடவடிக்கை தொடர்பாக இயைபான ஒழுக்காற்று அதிகாரிக்கு விதப்புரைகளைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 23, 24, 25, 26 ஆகிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 23, 24, 25, 26 ஆகிய பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நுண்ணாய்வுகளில் அல்லது விசாரணைகளில் பகிரங்க அலுவலர்களின் உதவி.

23. இச்சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப் பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்று ஏதேனும் கருமம் அல்லது சம்பவம் பற்றி ஒரு நுண்ணாய்வை அல்லது விசாரணையை அல்லது ஒரு நுண்ணாய்வு மற்றும் விசாரணை ஆகிய இரண்டை யும் நடாத்துவதற்குச் சானதிபதியினால் தேவைப்

படுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆணைக் குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமை எவ்வாறிருப்பினும், அது, இயைபான நியமனம் செய்யும் அதிகாரியின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகிரங்க அலுவலரின் உதவியுடன், அத்தகைய அலுவலரினூடாக அதன் பணிப்புகளின்கீழும் மேற்பார்வையின்கீழும் உள்ள இயைபான ஏதேனும் கருமத்தை அல்லது சம்பவத்தைப் பற்றிய நுண்ணாய்வுகளை நடாத்துவிப்பதற்கும் உரித்துடையதாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது அத்தகைய நுண்ணாய்வின்போது சேகரிக்கப்பட்ட விடயங்களைப் பரிசோதனை செய்து அத்தகைய கருமம் அல்லது சம்பவம் பற்றி, இயற்கை நீதி பற்றிய விதிகளைக் கடைப்பிடித்து விசாரணை செய்திருந்தாலொழிய, ஆணைக்குழுவானது, நுண்ணாய்வு செய்யப்பட்ட அத்தகைய கருமம் அல்லது சம்பவம் மீது ஏதேனும் முடிடைச் செய்தலாகாது.

குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்.

24. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றினால், விடயத்துக்கேற்ப, ஒரு நுண்ணாய்வின் அல்லது விசாரணையின்போது அல்லது நுண்ணாய்வு மற்றும் விசாரணை ஆகிய இரண்டின்போதும் சேகரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, ஏதேனும் தவறு தொடர்பில் சட்ட நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

ஆணைக்குழு விதிகளை யாக்குதல்.

25. (1) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்று, இச்சட்டத்தினதும் வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சரின் அங்கீகாரத்துடன், ஒழுங்கமைப்புசார் கட்டமைப்பு, கீழ்நிலைக் கட்டமைப்புகளின் ஆணைகள், ஆணைக்குழு அலுவலர்களின் பணிகள் என்பன தொடர்பிலான விதிகளையாக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளினால் ஆளப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, காலத்துக்குக் காலம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளைத் திருத்தலாம்.

(4) ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள், செயல்முறைக்குகந்தவாறு விரைவாக, வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்கள்.

26. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விசாரணையொன்றை அல்லது நுண்ணாய்வு ஒன்றை நடாத்துகையில், சட்டத்துறைத் தலைமையதிபதி —

(அ) ஏதேனும் ஆணைக்குழுவின் முன்னிலையில் தோற்றலாம்;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி விடயத்திற்கேற்ப, நுண்ணாய்வுக்கு அல்லது விசாரணைக்கு இயைபானதாகவுள்ள ஏதேனும் சான்றை அல்லது வேறு விடயத்தை ஆணைக்குழுவுக்கு முன் வைக்கலாம்;

(இ) ஆணைக்குழுவால் கட்டளை விட்டழைக்கப்பட்ட எவரேனும்சாட்சியின் சான்று, விடயத்திற்கேற்ப, நுண்ணாய்வுக்கு அல்லது விசார

ணைக்கு முக்கியமானது அல்லது அதற்கு இயைபான தகவலை வெளிப்படுத்தியுள்ளது என அவருக்குத் தோன்றுமாயின் அத்தகைய சாட்சியை விசாரணை செய்யலாம்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட வேண்டுகோளின் மீது, ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய விசாரணையை அல்லது நுண்ணாய்வை நடாத்தும்போது அத்தகைய ஆணைக்குழுவினால் பதியப்பட்ட எல்லாக் கூற்றுக்களினதும் சாட்சியங்களினதும் பிரதிகளையும் மற்றும் சேகரிக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட வேறேதேனும் விடயத்தையும் சட்டத் துறைத் தலைமையதிபதிக்குக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம். அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்